# இராஜராஜசோழனின் நீர்மேலாண்மைத்திறன் பற்றிய சிறப்புகள்

ச.வாசுதேவன்

முதுகலைத்தமிழ் முதலாமாண்டு

இலக்கியத்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர் – 613010

மின்னஞ்சல் : shankarvasu98@gmail.com

1

**முன்னுரை :**

காவிரி பாய்ந்து வளம் செழிக்கும் நாடு சோழநாடு. இச்சோழ நாட்டின் தலைநகராக விளங்குவது தஞ்சாவூர். தஞ்சையை கி.பி.850 – 907 ஆம் ஆண்டு பல போராட்டங்களுக்குப் பிறகு பரகேசரி விசயாலய சோழன் மீட்டான். மீட்டதோடு மட்டுமல்லாது முடிசூட்டி அரசாண்டான். அவனுக்குப் பின் அவனின் மகனான முதலாம் ஆதித்த சோழன் ஆண்டான். அதனைத் தொடர்ந்து பராந்தகன் மரபினர் ஆண்டனர். பராந்தக சோழனின் வழிவந்த இரண்டாம் பராந்தகன் (சுந்தரச்சோழன்) ஆண்டான். அவனுக்குப் பின் சுந்தரசோழனின் மகனான ஆதித்த கரிகாலன் சிலகாலம் ஆட்சியில் இருந்தான். அவன் சோழ அரசாங்க அலுவலர்களால் ரகசியமாக கொலை செய்யப்பட்டான். அதன் பின் ஆட்சிப் பொறுப்பேற்றான் மன்னன் மதுராந்தகன். இவனை அடுத்து முதலாம் இராஜராஜன். முதலாம் ராஜராஜன் என்று ஆட்சிக்கு வந்தானோ அன்றிலிருந்தே சோழ அரசு வளர்ச்சியை நோக்கி அடிவைக்கத் தொடங்கியது. இராஜராஜன் கால் பதிக்காத துறைகளே இல்லை. கலை, இலக்கியம், மருத்துவம், கணிதம், சோதிடம் ஆகிய துறைகளில் வல்லுநனாக விளங்கினான். இராஜராஜன் நீர்மேலாண்மையிலும் சிறந்து விளங்கியுள்ளான். அம்மன்னனின் நீர் மேலாண்மைத் தன்மைகளையும், சிறப்புகளையும் இக்கட்டுரையில் விளங்கக் காண்போம்.

**இராஜராஜனும் நீர் சேமிப்பு முறைகளும் :**

வெண்ணிப் போரில் வெற்றி கொண்ட கரிகாலன் மரபில் வந்தவன், தான் என்பதை நிறைவேற்றியவன் சிவபாத சேகரன். எப்படி கரிகாலன் அழியா புகழ் கொண்ட கல்லணையைக் கட்டி நீரை சேமித்தானோ அதைப்போல இராஜராஜனும் மழைநீரை சேமித்து தனது ஆட்சியின் கீழிருந்த நிலங்களுக்கெல்லாம் கொடுத்து பயிர்செழிக்க உதவினான் என்று கல்வெட்டுகள் கூறுகின்றன. எப்படி இராஜராஜன் மழைநீரை சேமித்தானென்றால் “சாளவம்'' என்ற புதிய நீர் சேமிப்பு உத்தியைக் கையாண்டு மழைநீரை சிவகங்கைக் குளத்திற்குள் செல்லும் படி அமைத்துள்ளான். இதுமட்டுமல்லாது பல குளங்களையும் வெட்டி அதிலே மழை நீரை சேமித்து பயன்பாட்டுக்கு அமைத்தவன் மாமன்னன் இராஜராஜன். அவனின் புகழை இன்றளவும் நிலைநாட்டுவன அவன் வெட்டிய புகழ்பெற்ற குளங்கள்.1.சிவகங்கைக் குளம், 2.அய்யன் குளம்,3.சாமந்தான் குளம். சாளவம் என்பது நீர் போகும் கருங்கல் வாய்க்கால். அதன் வாயிலாகத்தான் மழைநீர் இம்மூன்று குளங்களுக்கும் செல்லும். மழையில்லாத காலங்களில் இக்குளங்களில் உள்ள நீரைப் பயன்படுத்தி உழவுத்தொழில் செழிக்கச் செய்துள்ளான் மாமன்னன் இராஜராஜன். மழை நீரைச் சேமிக்க தஞ்சாவூரில் மட்டும் 50 குளங்களை

மன்னன் வெட்டியுள்ளான் என்பது வரலாறு. செமிக்கப்பட்ட நீர் அனைத்தும் மழையில்லா நேரங்களில் பயன்பட்டுக்கு ஏற்றவாறு செய்தான். இராஜராஜன் தொடங்கிவைத்த இத்திட்டம் 2-ஆம் சரபோஜிவரை தொடர்ந்தது. இரண்டாம் சரபோஜி ஜலசூத்திரம் என்ற பெயரில் மழைநீரை செகரித்து வந்தான் என்பது வரலாறு. இன்று நவீனமயமாக்கப் பட்ட காலத்தில் மழைநீர் சேகரித்தவர்கள் நாம் ஆனால் கி.பி.1010 ஆம் ஆண்டிலேயே மழைநீரை செமிக்கும் முற்போக்குச் சிந்தனையாளனாய் விளங்கும் மாமன்னன் இராஜராஜனின் செயல்களை போற்றிப் பறைகொள்வது நமது கடமை.

**இராஜராஜனும் நீர் மேலாண்மைத்திறன் பற்றிய சிறப்புகளும் :**

இராஜராஜனின் நீர்மேலாண்மைத்திறத்தின் சிறப்புகளை பிற்காலச்சோழர் வரலாறு எனும் நூலின் வாயிலாக தி.வை.சதாசிவப்பண்டாரத்தார் கூறுகிறார். அதுமட்டுமல்லாது இராஜராஜனின் நீர்மேலாண்மை பற்றி ஆய்வு செய்த ஆர்.மணிமாறன் அவர்கள் சொல்கிறார் மூவேந்தர்களிலே சோழப் பேர்ரசு தான் நீர்மேலாண்மையை மேம்படுத்திய அரசு.அதிலும் குறிப்பாக கரிகாலன் செயல்பாடு கண்டு வியக்கத்தக்கது. கரிகாலனைத் தொடர்ந்து அவனின் மரபில் வந்தவன் மாமன்னன் இராஜராஜன். இராஜராஜனின் நீர்மேலாண்மை முற்போக்காய் விளங்குகிறது என்று தனது ஆய்வின் முடிவில் தெரிவித்துள்ளார். குடவாயில் பாலசுப்பிரமணியன் எழுதிய தஞ்சாவூர் எனும் நூலில் மாமன்னன் இராஜராஜன் வெட்டியதாக ஒருசில ஏரிகளைக் குறிப்பிட்டுள்ளார். அவை, ரங்க உடையான் ஏரி, கயிலாச குளம், சிங்கப்பெருமாள் குளம், ரெட்டி ஏரி இது போன்ற நீர் சேமிப்புக் களன்களைப் பட்டியலிட்டுக் காட்டுகிறார். நீர் ஒரு மனிதனின் அன்றாட வாழ்வில் பயன்படும் முக்கியமான ஒன்று, அதைத்தான் வலியுறுத்துகிறது வள்ளுவம்.

“நீரின்றி அமையாது உலகு யார்யார்க்கும்

வானின்று அமையா தொழுக்கு'' (குறள் - வான்சிறப்.1)

நீர்தான் ஒரு நாட்டின் தரத்தை உயர்த்தும், நீர் உயர நெல் உயரும், நெல்லுயர, குடியுயரும், குடியுயர கோன் உயர்வான் என்பதை அறிந்த மாமன்னன் இராஜராஜன் தண்ணீரை சேமித்து வளமான வேளாண்மையை உருவாக்க முனைந்தான், அதற்கு பாசனமுறை என்ற புதிய நீர் பாய்ச்சும் முறையைக் கையாண்டான். நீரும் சோறும் மனிதனை உருவாக்குபவை என்றறிந்து செயல்பட்டான். சோழ நாட்டை வளமாக்கினான், **சோழநாடு சோறுடைத்து** என்பது பழமொழி. பலவகையில் நீர் மேலாண்மையை வளப்படுத்தி அதனை மக்களின் பயன்பட்டிற்கு கொண்டு சேர்த்தான். சோழர்கள் அதிக அளவு ஏரிமுறைப் பாசனத்தையும் குறைந்தளவு குளத்து முறைப் பாசனத்தையும் கையாண்டனர். கிண்று, ஆறு, ஏரி, குளம், குட்டை, வடிகால், வாய்க்கால் பொன்ற பாசன முறைகளையும் கையாண்டனர். இராஜராஜன் காலம் தொட்டு கி.பி. 1250 வரை தொடர்ந்தது இந்த பாசன மரபு என்கிறார் குட.பாலசுப்பிரமணியம். மாமன்னன் இராஜராஜன் ஏரியை வெட்டி மக்களின் தண்ணீர் பஞ்சத்தைப் போக்கினான் என்று Ancient Irrigation Technology(sluice techology in tamil nadu) நூலில் டாக்டர் கே.ராஜன் கூறுகிறார். அந்த ஏரிகளின் பெயர் 1.அரியூர் மடை (ariyur matai), 2.தட்ச்சமுத்திரம்(Tacasamuttiram) என்பனவாகும். இந்த ஏரிகள் எந்த ஆண்டு கட்டப்பட்டதென்றால் முதல் ஏரி கி.பி.996 ல், இரண்டாவது கி.பி.10 நூற்றாண்டு கட்டப்பட்டது.

தட்ச்சமுத்திரம் ஒமலூர் வட்டம், தர்மபுரி மாவட்ட்த்தில் உள்ள ஆயிரமாண்டு பழைய ஏரி. இந்த ஏரியில் உள்ள ஒரு கல்வெட்டில் யாராவது இந்த ஏரியை சுத்தம் செய்தால் அவர்களின் பாதம் என் தலைமேலன என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

“ஸ்வஸ்திஸ் சுஷி
இராஜராஜ சோழ தேவர்க்கு
திருவேலுத்தித்துக் செல்ல நின்ற
திருநல்லியாண்டு பதினொன்றாவது
வடபுவனிய நாட்டு
கச்சிப்பள்ளி காமிந்தன்
பொங்கிழான் அமந்தன் களியும்
என் தம்பி...............ம்
இவ்விருவேம் எங்கள் கையால்
மணல் கொழுங்கி இவ்வேரி கட்டினோம்
இந்தன்ம்ம் அழிவு படாமர் காத்தான்
கால் என் தலைமேலன’’

என்று வந்துள்ளது நீரையும் அந்நீரை தாங்கி இருக்கும் களனையும் அழிவு படாமல் காத்தவர்களின் கால்கள் எந்தலைமேல் என்று சொல்லுமளவிற்கு நீருக்கு ஒரு மன்னன் முக்கியத்துவம் கொடுத்து சொல்கிறான் என்றால் அவனின் சிந்தனையை என்னவென்று புகழ்வதென்றே தெரியவில்லை. நீர் மேலாண்மையில் இராஜராஜனின் பங்கு அளப்பறியது.அழியாத சிறப்புடையது.

**முடிவுரை:**

நீரின்றி அமையா யாக்கைக் கெல்லாம்
உண்டிக் கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே
உண்டி முதற்றே உணவின் பிண்டம்
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே!

(புறம்: 18 பாடல்)

நீரும் சோறும் இல்லாமல் மனிதன் வாழமுடியாது. நீர் மனிதனுக்கு அடிப்படையான ஒன்று. அதை பலவழிகளில் காத்தனர் நம் மன்னர்கள். அந்த வகையில் காவிரியின் குறுக்கே கல்லணை கட்டி காத்த மாமன்னன் காவேரி நாயகனின் வழித்தோன்றலான பொன்னியின் செல்வன் முதலாம் ராஜராஜன். நீர்மேலாண்மை எல்லோராலும் கண்டு வியக்கத்தக்கவை. அந்த நீர் மேலாண்மையின் தன்மைகள், மன்னவன் கடைபிடித்த நீர் மேலாண்மையின் உத்தி முறைகள் இவையாவும் அவனின் முற்போக்குச் சிந்தனையினை பறைசாற்றுகின்றன. ஒரு நாட்டின் அரசன் இப்படித்தான் ஆட்சி செலுத்த வேண்டும் என்பதற்கு உதாரணமாய் வாழ்ந்தவன் சோழன் இராஜராஜன். இவன் கையாண்ட நீர் பாசன முறையில் சோணாடே பஞ்சமின்றி வளமுடன் வாழ்ந்தது எனலாம். இராஜராஜன் வெட்டிய நீர் களன்கள் குறைவு என்றாளும் அவன் நீர் மேலாண்மையைக் கையாண்ட விதமும் பாசன

உத்திமுறைகளுமேயே இராஜராஜனை நீர் மேலாண்மைக் காத்த நித்தியனாய், பாசன முறையின் பண்பாளனாய் காட்டுகின்றன. பொன்னியின் செல்வனில் எழுத்தாளர் கல்கியும் அதையே வலியுருத்துகிறார்.

**துணைநூற்பட்டியல் :**

1. திருக்குறள் – பரிமேலழகர் உரை, பக்கம் – 14
2. தஞ்சாவூர் – குடவாயில் பாலசுப்பிரமணியம்
3. சோழர்கள் – கே.ஏ.நீலகண்ட சாஸ்த்திரி
4. ஔவையார் தனிப்பாடல் - பழமொழி
5. ஆர்.மணிமாறன் – தி இந்து திசை நாளிதழில் வெளியான கட்டுரை
6. பிற்காலச் சோழர் வரலாறு – தி.வை.சதாசிவப்பண்டாரத்தார்
7. Ancient Irrigation Technology(sluice techology in tamil nadu) டாக்டர் கே.ராஜன்
8. புறநானூறு – புலியூர் கேசிகன் உரை, சாரதா பதிப்பகம்.